சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS 33/2015

18.11.2025.

DW - 2

பி.வா.சா. 2. சுப்ரமணியன், த/பெ. பொன்னுசாமி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

எனக்கு சொந்த ஊர் விளாத்தடி கிராமம். மாரியப்பன் எழுதி வைத்த உயில் சம்மந்தமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன். எனக்கும் அந்த குடும்பத்திற்கும் என்ன சம்மந்தம் என்றால் - என் தகப்பனார் மாரியப்பன் வீட்டில் வேலை பார்த்தார். நான் வேலை பார்க்கவில்லை. அந்த வகையில் மாரியப்பனை தெரியும். நானும் எனது அப்பாவும் மாரியப்பன் எழுதி வைத்த ஆவணத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். ஒரே ஒரு கையொப்பம் செய்தேன். மாரியப்பன் எப்போது இறந்தார் என்றால் - தேதி மாதம் வருடம் நினைவில்லை. எந்தெந்த ஆவணங்களில் யார் யார் சம்மந்தப்பட்ட ஆவணங்களில் கையொப்பம் செய்தேன் என்று நினைவிருக்கிறதா என்றால் - இல்லை. குறிப்பாக மாரியப்பன் சம்மந்தப்பட்ட ஆவணத்தில் கையொப்பம் செய்ததாக சொல்லியுள்ளேன். அந்த ஆவணத்தின் தேதி தெரியுமா என்றால் - தேதி மாதம் வருடம் ஞாபகம் இல்லை. என்னை சாட்சி போட மாரியப்ப சேர்வயைர் அழைத்தார். எங்கள் கிராமத்திற்கு வந்து என்னை அழைத்தார். அவரது சளி பிரச்சினைக்காக மருத்துவமனைக்கு சென்றபோது என்னை அழைத்தார். பேருந்தில் தான் பட்டுக்கோட்டை மருத்துவமனைக்கு சென்றார். அந்த சமயம் மாரியப்பனுக்கு என்ன வயதிருக்கும் என்றால் - 70 வயதிருக்கும். மாரியப்பன் மருத்துவமனைக்கு அவரது மகனோடு வந்தாரா என்றால் - இல்லை. அவர் தனித்துதான் வந்தார். மோகன்தாஸ், தான் அவரது தகப்பனாரை மருத்துவமனைக்கு அழைத்து செல்வார் என்றும் அன்றைய தினம் மோகன்தாஸ் உடன் வந்தாரா என்றால் - இல்லை. நான் மாரியப்பனுக்கு உள்ளூர் காரரோ அல்லது உறவினரோ அல்ல. நான் எப்போது கையொப்பம் செய்தேன் என்றால் - அன்றைய தினம் காலை 09.00 மணியிருக்கும். நான் செல்லும்போது உயிலை எழுதிக்கொண்டிருந்தார். வெள்ளை பேப்பரில எழுதிக்கொண்டிருந்தார்கள். மாரியப்பன் சேர்வையர் தான் எழுதினார். எத்தனை பேப்பரில் எழுதினார்ள ன்றால் - 1 பேப்பரில் தான் எழுதினார். எவ்வளவு நேரம் எழுதினார் என்றால் - ½ மணி நேரத்தில் உயிலை எழுதிவிட்டார். எதனை பார்த்து உயிலை எழுதினார் என்றால் - வருவாய் பேப்பர்களை பார்த்து எழுதினார். நேரடியாக எழுதி அப்படியே கையெழுத்து போட்டார். நகல் எதுவும் எடுக்கவில்லை. எத்தனை இடங்களில் கையெழுத்து போட்டார் என்றால் - ஒரு இடத்தில் தான் கையெழுத்து போட்டார். எந்த பேனாவினால் கையெழுத்து போட்டார் என்றால் - ஞாபகம் இல்லை. எழுதிய பேனாவினால் கையெழுத்து போட்டதாக சாட்சி கூறுகிறார். என்ன பேனா என்று ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் உயில் மாரியப்பன் எழுதியதுதான். இங்க்

பேனாவினால் எழுதியுள்ளார் என்றால் - சரிதான். கையெழுத்தானது பால்பாயிண்ட் பேனாவினால் கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் - சரிதான். இரண்டிற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் - சரிதான். எழுதப்பட்ட பேனாவினால் கையெழுத்து போடவில்லை என்றால் - நினைவில்லை. வேறு யார் எல்லாம் சாட்சி போட்டார்கள் என்றால் - சாம்பசிவம் கையெழுத்து போட்டார். அவர் என்ன பேனாவினால் கையெழுத்து போட்டார் என்றால் - ஞாபகம் இல்லை. அதன்பின்னர் நான் கையெழுத்து போட்டேன். என்ன பேனாவினால் கையெழுத்து போட்டேன் என்றால் - நினைவில்லை. உயில் இங்க் பேனாவினால் எழுதப்பட்டுள்ளது என்றாலும் சாம்பசிவம் கையெழுத்து இங்க் பேனாவினால் தான் போட்பட்டுள்ளது என்றாலும் - சரிதான். உயிலை சாம்பசிவம் எழுதவில்லை. என்னுடைய கையெழுத்தும் மாரியப்பன் கையெழுத்தும் வேறு பேனாவினால் போடப்பட்டுள்ளது என்றால் . சரிதான். ஒரே பால்பாயிண்ட் பேனாவினால் தான் அந்த கையெழுத்து போடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். அந்த உயில் எழுதி 19, 20 ஆண்டுகள் ஆகிறது. இந்த உயில் இல்லாமல் வேற எங்காவது சாட்சிக்கு சென்றுள்ளேனா என்றால் - இல்லை. உயில் இந்த வழக்கிற்கு பிறகு தயார் செய்யப்பட்டது என்றாலும் பிரதிவாதி கேட்டதற்காக அதில் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றாலும் - சரியல்ல. உயில் வெள்ளை பேப்பரில் எழுதப்பட்டது என்றால் - சரிதான். உயில் பச்சை பேப்பரில் எழுதப்பட்டுள்ளதால் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ்- முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.